## விண்ணப்படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் அறிவுறுத்தல்களை வாசித்த பின்னர் விண்ணப்ப படிவத்தினை நிரப்பவும்:

01. **தனிநபர் தகவல்**

முழுப்பெயர், முதலெழுத்துக்களுடன் பெயர், விலாசம் என்பனவற்றைத் தெளிவாக எழுதவும்.

மின்னஞ்சல், தொலைபேசி இலக்கம், என்பனவற்றை குறிப்பிடவும். அனேகமான தகவல் இவைகள் மூலமாகவே விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பப்படும்.

நீங்கள் எந்த தகைமைப் பிரிவின் கீழ் விண்ணப்பிக்கின்றீர்கள் என்பதனை உரிய இலக்கமிட்டுக் காட்டடவும். (உ+ம்: உரிய G.C.E. (A/L) ) எனின் இலக்கம் 1 யும் வேறு ஏதும் தகைமை எனின் 2யும் இடுக.

02. **G.C.E (A/L) EXAM**

உரிய பாடங்களையும் அதன் தரத்தினையும் அத்துடன் பொதுப் பரீட்சையின் (Common General Test) புள்ளியையும் Z Score உடன் எழுதவும். உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.

03. **தொழில் சார் தகைமைகள்**

G.C.E (A/L) தகைமை இல்லாமல் தொழில்சார் தகைமைகள் மூலம் விண்ணப்பிப்பதாயின் மாத்திரம் தொழில்சார் தகைமைகளைக் குறிப்பிட்டு அதன் பிரதியை இணைக்கவும். A/L தகைமை இருப்பின் இதை நிரப்பத் தேவையில்லை.

04. **வேறு தகைமைகள்.**

வேறு ஏதும் தகைமை அடிப்படையில் விண்ணப்பிப்பதாயின் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியை இணைக்கவும்.

05. **முதலாம் வருட பாடங்களை பதிவு செய்தல்**

முதலாம் வருடத்தில் பிரதானமான பாடங்களில் (Core Course) நீங்கள் விரும்புகின்ற மூன்று பாடங்களை தெரிவு செய்து நிரப்ப வேண்டும்.

06. **விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம்**

மேற்படி கட்டணமான ரூபா 1000.00 ஐ ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் பல்கலைக்கழகத்தின் PIV மூலம் செலுத்தி வங்கியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட PIV University Copy ஐ கழராதபடி ஒட்டவும். வங்கியினால் வழங்கப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பதாரி பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். பல்கலைக்கழக மூலம் மாத்திரமே கட்டணங்களை செலுத்த வேண்டும் என்பதை கவனத்தில் கொள்க.

மேற்படி விளக்கத்தை குறிப்பிட்ட பின்னர், i-vii வரையான ஆவணங்கள் அனைத்தும் அனுப்பப்படல் வேண்டும். இவற்றில் ஒன்றேனும் இல்லாத பட்சத்தில் முழுமை பெறாத (incomplete) விண்ணப்பமாகக் கருதப்பட்டு நிராகரிக்கப்படும். ரூபா. 8.00 பெறுமதியான அஞ்சல் அட்டை அனுப்பப்படல் வேண்டும். தவறும் பட்சத்தில் விண்ணப்பம் கிடைத்ததற்கான அறிவுறுத்தல் வழங்கப்படமாட்டாது. பெயரில் ஏதும் மாற்றம் இருப்பின் சத்தியக்கடதாசி (viii-Affidavit) இணைக்க வேண்டும்.

***குறிப்பு***: புகைப்படத்தை உறுதிப்படுத்தும் பத்திரத்தில் (Photo Affixing Sheet) அண்மையில் எடுத்த புகைப்படத்தை விண்ணப்பபடிவத்தில் குறிப்பிடப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.